بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيم

**அல் வஃபா -நன்றி அறிதல்**

யார் அல்லாஹ்வை பயந்தார்களோ, அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பேணி நடந்தார்களோ, அல்லாஹ்வின் சட்ட வரம்புகளுக்குள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்களோ, அல்லாஹ் தடுத்த காரியங்களை விட்டு தங்களை தடுத்து கொண்டார்களோ, அல்லாஹ் உடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சொல்லிலும் செயலிலும் அவர்களை கீழ்ப்படிந்தார்களோ அவர்கள் நிச்சயமாக இம்மையிலும் வெற்றி அடைந்தார்கள்; அல்லாஹ் உடைய அருளால் அவர்களுக்கு மறுமையிலும் வெற்றி உண்டு.

அன்பானவர்களே! ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மிக முக்கியமான ஒரு நற்பண்பை நாம் பார்க்க இருக்கின்றோம்; எந்த ஒரு நற்பண்பு இந்த சமுதாயத்தில் இப்பொழுது தேடினால் கூட அரிதாக இருக்குமோ, அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எந்த ஒரு நற்பண்பை தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்து நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கைவிடக்கூடாது என்று வலியுறுத்தியது மட்டுமல்லாமல், நம்முடைய ஈமான் இறை நம்பிக்கையோடு அந்த நற்பண்பை சம்பந்தப்படுத்தினார்களோ அந்த முக்கியமான நற்குணத்தை தான் நாம் பார்க்க இருக்கின்றோம்.

ஒரு மனிதர் நமக்கு ஏதாவது ஒரு உதவி செய்தால் அவர் யாராக இருந்தாலும் எந்த வகை உதவியாக இருந்தாலும் சரி, கஷ்டமான இக்கட்டான நிலையில் அவர் செய்த உதவியை மறக்கக் கூடாது என்று மார்க்கம் நமக்கு சொல்கின்றது; அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழிகாட்டுகிறார்கள். அவருடைய மதம் வேறுபட்டதாக இருந்தாலும் சரி, அவருடைய கொள்கை வேறுபட்டதாக இருந்தாலும் சரி, அவர் செய்த உதவிக்கு கைமாறு செய்யவேண்டும் அந்த உதவியை நினைத்து அவருக்கு உதவி செய்யக்கூடிய கருணை காட்டக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் கண்டிப்பாக அவருக்கு கருணை காட்ட வேண்டும். அவருக்கும் நமக்கும் இடையில் ஏதாவது ஒரு மார்க்க காரணமாக பகைமை ஏற்பட்டிருந்தால் கூட அவர் மீது உதவி செய்வது அவருக்கு அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிகாட்டுதலாக அவர்களுடைய பண்பாக அவர்கள் போதித்த நற்குணமாக நமக்கு இருந்ததை பார்க்கின்றோம்.

கண்ணியத்திற்குரியவர்களே! அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் குணத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்;

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ

நபியே! நிச்சயமாக நீங்கள் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 68 :4)
எந்த நற்குணத்தை கொண்டு மனித சமுதாயம் சீர் பெற முடியுமோ, எந்த நற்குணம் மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத ஒன்றோ அந்த எல்லா நற்குணமும் நபியே உங்களிடத்தில் இருக்கிறது. அவற்றுக்கு நீங்கள் சிறந்த முன் உதாரணமாகத் திகழ்கிறீர்கள்.

அன்பானவர்களே! அந்த நற்குணத்தின் ஒன்றுதான் அல் வஃபா -வாக்கை நிறைவேற்றுவது; செய்த உபகாரத்தை வாழ்நாளெல்லாம் நன்றியோடு இருப்பது. இந்த வஃபா என்ற நற்குணத்திற்கு நீதம் பேணுவது, நல்லுதவி செய்வது, மீண்டும் உபகாரம் செய்வது, சமய சந்தர்ப்பத்திற்கு தேவையான உதவி செய்வது என்பதாக இமாம் இப்னுல் கையும் ரஹ்மத்துல்லாஹி அலைஹி குறிப்பிடுகின்றார்கள். நம்முடைய மார்க்கம் அல்லாஹ்வுடைய வேதம் இதைத்தான் நமக்கு வலியுறுத்துகின்றது. அல்லாஹு தஆலா கூறக்கூடிய அந்த திருவசனத்தை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

هَلْ جَزَاءُ الْاِحْسَانِ اِلَّا الْاِحْسَانُ

(உங்களின்) நன்மைக்கு நன்மையைத் தவிர (வேறு) கூலி உண்டா? (அல்குர்ஆன் 55 : 60)

உபகாரம் என்றால் ஒருவர் ஒருவருக்கு உதவி செய்வது, நன்மை செய்வது, கை கொடுப்பது, உபகாரத்திற்கு கூலி உபகாரமாக இருக்குமே தவிர வேறு எதுவாக இருக்க முடியும். நீங்கள் அல்லாஹ்விற்கு நன்மை செய்தால் நீங்கள் செய்ததை விட சிறந்ததாக அல்லாஹ் உங்களுக்கு கொடுக்கப் போகிறான். உங்களுக்கு யாராவது நன்மை செய்திருந்தால் அதற்கு நீங்கள் அவர்களுக்கு நன்மை தான் செய்திருக்க வேண்டும்.

அன்பானவர்களே! நம்முடைய மார்க்கம் ஒருவர் நமக்கு தீமை செய்து இருந்தாலும் கூட அவர்களுக்கு நன்மையை கொண்டு அதை சரி செய்ய வேண்டும் என்று நமக்கு சொல்கிறது. மக்கள் சொல்வார்கள்; முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்று. நமது மார்க்கம் அப்படி சொல்லவில்லை. பழி வாங்கக் கூடிய குணத்தையும் மன்னிக்கக் கூடிய குணமாக மாற்ற சொல்லக் கூடிய மார்க்கம் தான் நம்முடைய மார்க்கம்.

صِلْ مَنْ قَطَعَكَ وَأَعْطِ مَنْ حَرَمَكَ وَأَعْرِضْ عَمَّنْ ظَلَمَكَ

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறுகிறார்கள்: உன்னுடைய உறவை ஒருவர் துண்டிக்கிறார் என்றால் அவருடன் நீ சேர்ந்து வாழு, ஒருவர் உனக்கு அநியாயம் செய்தால் அவரை நீ மன்னித்துவிடு. (1)

அறிவிப்பாளர்: உக்பா பின் ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: முஸ்னது அஹ்மது, எண் : 16696

அன்பானவர்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்கையில் நடந்த சில சம்பவங்களை நாம் பார்க்கிறோம்; எந்த அளவிற்கு அவர்கள் இந்த வஃபா என்ற நற்குணத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தார்கள் என்பதை. பத்ர் போரை நினைத்துப் பாருங்கள்; நபியை அழிப்பதற்காக, அவர்களுடைய அழைப்புப்பணியை முடக்குவதற்காக 1000 குறைஷி வீரர்கள் சண்டை செய்வதற்காக வந்திருக்கிறார்கள்; அதிலே 70 பேர் கொல்லப்பட்டார்கள்; 70 பேர்

சிறைபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முத்இம் இப்னு அதி என்ற முஷ்ரிக்கை நினைத்துப்பார்க்கிறார்கள். சொன்னார்கள்;

لَوْ كَانَ الْمُطْعِمُ بْنُ عَدِيٍّ حَيًّا ثُمَّ كَلَّمَنِي فِي هَؤُلَاءِ النَّتْنَى لَتَرَكْتُهُمْ لَهُ

முத்இம் இப்னு அதி இப்பொழுது உயிரோடிருந்து, கைது செய்யப்பட்டு இருக்கக்கூடிய இந்த எழுவது கைதிகளையும் விடுதலை செய்து விடுங்கள் என்று என்னிடம் சொன்னால் நான் எந்தவிதமான ஈட்டு தொகையை வாங்காமல் எந்த விதமான பிணை தொகையும் வாங்காமல் அவருக்காக இந்த எழுபது கைதிகளையும் விட்டு இருப்பேன்.

அறிவிப்பாளர்: ஜுபைர் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 2906

யார் இந்த முத்இம் இப்னு அதி என்பவர்? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அவர் என்ன செய்தார்? இவர் முஷ்ரிக்களில் ஒருவர். இவர் ஈமானை ஏற்றுக்கொள்ளவில்லை. மக்காவில் ரசூலுல்லாஹ் 13 வருடம் வாழ்ந்தபோதிலும் இவர் ஈமானை ஏற்றுக்கொள்ளவில்லை; இஸ்லாத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இவர் செய்த ஒரே ஒரு உதவியை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நினைத்துப் பார்த்தார்கள். அந்த ஒரு உதவிக்காக இந்த 70 கைதிகளையும் எந்த ஒரு பிணை காசு வாங்காமல் விடுதலை செய்யச் சொன்னார்கள்.

மக்காவில் 40 ஆண்டுக்குப் பிறகு நபித்துவம் கிடைக்கப்பெற்று மக்காவில் 10 வருடங்களுக்குப் பிறகு அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தாயிஃப் செல்கிறார்கள். ஏன்? மக்காவாசிகள் ஈமானை ஏற்றுக்கொள்ளவில்லை; இந்த இஸ்லாத்திற்கு ஆதரவு தரவில்லை; வேறு வழியில்லை; எனவே ஈமானை ஏற்றுக் கொண்டவர்களைப் பாதுகாத்து அந்த இஸ்லாத்தை ஏற்ககூடிய கூட்டத்தை தேடி சென்றார்கள். ஆனால் அந்த தாயிஃப் மக்கள் ஈமானை ஏற்றுக்கொள்ளாததைவிட குறைஷிகளை விட மோசமாக நடந்து கொண்டார்கள். அல்லாஹு ஸுப்ஹானஹு தஆலா ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை இறக்கினான்.

அந்த மலைகளுக்கு உரிய பொறுப்பாளரான வானவரோடு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சலாம் கூறி ரசூலுல்லாஹ்விடத்திலே சொல்கிறார்கள்; அல்லாஹு தஆலா இந்த மலைகள் உடைய வானவரை இறக்கி இருக்கிறான். நீங்கள் சொன்னால் இந்த இரு மலைகள் அதனுடைய மக்களையும் சேர்த்து அழித்து விடுவார்கள் என்று. அதற்க்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விற்கு கோபம் இல்லை என்றால் நான் அல்லாஹ்வை ஆதரவு வைக்கின்றேன்; அல்லாஹ்வின் நாட்டம் இருந்தால் இந்த மக்களுடைய சந்ததிகளில் அல்லாஹ்வை ஈமான் கொள்வார்கள் என்று கூறினார்கள். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அந்த மக்கள் பத்து நாளாக தொந்தரவு செய்து இரத்தம் உடலிலிருந்து உதிரும் படி அடித்து விரட்டினார்கள். அல்லாஹு தஆலா உடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவர்களை மன்னித்தது மட்டுமல்ல. அவர்களுக்காக அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்; யா அல்லாஹ்! அவர்களுடைய சந்ததிகளை ஈமானை ஏற்றுக் கொள்ளக் கூடிய மக்களாக உன்னை வணங்க கூடிய மக்களாக ஆக்கிவாய் என்று துஆச் செய்தார்கள். (2)

அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹுஅன்ஹா, நூல்: புகாரி, எண் : 2992

இறுதியாக ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாயிப்பில் இருந்து புறப்பட்டு மக்காவை நோக்கி வருகிறார்கள்; ஆனால் வருவதற்கு தைரியம் இல்லை; வழியிலே நின்று விடுகிறார்கள்; ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உடன் சைது இப்னு ஹாரிஸா ரளியல்லாஹு அன்ஹா சென்று இருந்தார்கள்; அவர்கள் ரஸூலுல்லாஹ்விடம் கேட்கிறார்கள்; அல்லாஹ்வுடைய தூதரே! நீங்கள் மக்காவிற்குள் எப்படி செல்ல முடியும்? உங்களை பாதுகாத்து வந்த உங்களுடைய சச்சா அபூதாலிப் இப்பொழுது அங்குயில்லை. உங்களைப் பாதுகாப்பதற்கு அங்குயாரும் இல்லை. உங்களுடைய மனைவி கதீஜா இல்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களை அங்கு கொள்வதற்காக திட்டம் தீட்டி கொண்டு இருக்கிறர்கள். இனி எந்த பாதுகாப்பில் மக்காவில் நீங்கள் நுழைய முடியும்?

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் இந்த இடத்தில் நமக்கு ஒரு அழகிய முன்மாதிரியை கற்றுத்தருகிறார்கள்; ஜைய்தே! கண்டிப்பாக அல்லாஹ் நமக்கு உதவி செய்வான்; கண்டிப்பாக அல்லாஹ் நமக்கு ஒரு வழியைத் திறப்பான் என்று.

அன்பானவர்களே! இது தான் இறைத்தூதர்கள் உடைய ஒரு பண்பாக இருந்தது. எங்கே எல்லா வாசல்களும் அடைக்கப்படுமோ அங்கே மறைவிலிருந்து அல்லாஹ் ஒரு வாசலை திறந்து வைப்பான். யார் அவனை மட்டும் நம்புகிறார்களோ, பொறுப்பு சாட்டுகிறார்களோ அவர்களுக்காக அல்லாஹ் உதவுவான்.

نِعْمَ الْمَوْلَى وَنِعْمَ النَّصِيرُ

அல்லாஹ் அவன் சிறந்த பொறுப்பாளன். சிறந்த உதவியாளன். (அல்குர்ஆன் 8 : 40)

இப்படி யார் அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு கண்டிப்பாக அல்லாஹு தஆலா ஒரு வாசலைத் திறப்பான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கூட்டத்தார்கள் கடலுக்கு முன்பாக நின்று கொண்டு மூஸாவின் கூட்டத்தினர் மூஸாவே! நாம் மாட்டிக் கொண்டோம்; சரியான இக்கட்டான ஒரு தருணத்தில் கொண்டு நிறுத்தி விட்டீரே! கடலில் எப்படி குதிப்பது குதித்தாலும் சாவு; நின்றாலும் ஃபிர்அவ்னுடன் படை வாலுடன் வருகிறது; தப்பிப்பதற்கு வழி இல்லை என்று சொன்ன போது மூஸா அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள்: நீங்கள் சொல்வது போல் இல்லை நிச்சயமாக வழி இருக்கிறது; அல்லாஹு தஆலா நமக்கு வழி காட்டுவான். எனது ரப்பு வழிகாட்டுவான். அல்லாஹ் உதவி செய்தான்.

فَلَمَّا تَرَاءَى الْجَمْعَانِ قَالَ أَصْحَابُ مُوسَى إِنَّا لَمُدْرَكُونَ (61) قَالَ كَلَّا إِنَّ مَعِيَ رَبِّي سَيَهْدِينِ (62) فَأَوْحَيْنَا إِلَى مُوسَى أَنِ اضْرِبْ

بِعَصَاكَ الْبَحْرَ فَانْفَلَقَ فَكَانَ كُلُّ فِرْقٍ كَالطَّوْدِ الْعَظِيمِ

இவ்விரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் கண்டபொழுது'' நிச்சயமாக நாம் அகப்பட்டுக் கொண்டோம்'' என்று மூஸாவுடைய மக்கள் கூறினார்கள். அதற்கு (மூஸா) '' அவ்வாறல்ல. நிச்சயமாக என் இறைவன் என்னுடன் இருக்கிறான். (நாம் தப்பிக்கும்) வழியை நிச்சயமாக அவன் எனக்கு அறிவிப்பான்'' என்றார்.ஆகவே, நாம் மூஸாவை நோக்கி'' நீர் உமது தடியினால் இந்தக் கடலை அடிப்பீராக'' என வஹ்யி அறிவித்தோம். (அவர் அடிக்கவே) அது (பலவழிகளாகப்) பிளந்துவிட்டது. ஒவ்வொரு பிளவும் பெரும் மலைகளைப் போல் இருந்தது. (அல்குர்ஆன் 26 : 61-63)

இப்படித்தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்த சவ்ர் மலைக்குகையில் சொன்னார்கள்: அபூபக்ர் சொல்கிறார்; அல்லாஹ்வுடைய தூதரே! இந்த வீரர்கள் குனிந்து நமது பாதங்களை பார்த்தால் போதும் நம்மை பார்த்து விடுவார்களே! உருகிய வாளோடு இருக்கின்ற இந்த வீரர்கள் நம்மை என்ன செய்வார்கள்? அல்லாஹ்வுடைய தூதர் சொன்னார்கள்;

لَا تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا

கவலைப்படாதீர் அபூபக்ரே! அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். (அல்குர்ஆன் 9 : 40)

مَا ظَنُّكَ يَا أَبَا بَكْرٍ بِاثْنَيْنِ اللَّهُ ثَالِثُهُمَا

அபூபக்ரே! அந்த இருவருடைய உனது எண்ணம் என்ன? அவர்களில் மூன்றாவதாக அல்லாஹ் இருக்கின்றான். நம்பிக்கையோடு தூதர் சொன்னார்கள்; அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்; அல்லாஹ் நமக்கு உதவி செய்வான் என்று.

புகாரி எண் : 3380, 4295 முஸ்லிம் எண் : 4389 திர்மிதி எண் : 3021

அந்த நேரத்தில்தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மக்காவிலிருந்து வெளியே வந்து தங்கி யோசித்துக் கொண்டிருந்தபோது, அல்லாஹ்வுடைய உதவி வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது முத்இம் இப்னு அதி வருகிறார்;

முஷ்ரிக்காக இருந்த அந்த முத்இம் வருகிறார்; முஹம்மது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பார்த்து கேட்கிறார்; முஹம்மதே! உம்முடைய நிலை என்ன? எதற்க்காக ஊருக்கு வெளியிலேயே நீங்கள் தங்கியிருக்கின்றீர்கள்? அதற்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்; எந்த பாதுகாப்பிலே நான் மக்காவில் நுழைவேன்? நான் மக்காவிலிருந்து வெளியேறி வேறு எங்கேயாவது சென்று விடலாமா என்று யோசிக்கிறேன். முத்இம் சொல்கிறார்; மக்காவிலிருந்து உங்களைப்போன்ற ஒருவர் வெளியே செல்வதா? நீங்கள் வாருங்கள் நான் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறேன் என்று கூறினார்.

அவர் அல்லாஹ்வுடைய தூதரின் நற்குணத்தை எண்ணிப் பார்த்தார்; அவர்களுடைய குடும்பத்தாரின் நற்குணத்தை எண்ணிப் பார்த்தார்; முஹம்மதே! நான் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறேன்; என் குடும்பம் உங்களுக்கு பாதுகாப்பு தரும் என்று சொல்லி, பிறகு அவருடைய வாகனத்தில் விரைந்து செல்கிறார்; மக்காவில் கஃபாவில் நின்றுகொண்டு சொல்கிறார்; நான் முஹம்மதுக்கு பாதுகாப்பு கொடுத்துவிட்டேன்; இனி யாரும் முஹம்மதை அடிப்பதோ தொந்தரவு செய்வதோ கூடாது; யாரும் ஏசவும் கூடாது; முஹம்மதை நீங்கள் பழிக்க கூடாது என்று சொல்கிறார். தன்னுடைய ஆண்பிள்ளைகளுக்கு உங்களது வாளை எடுத்துக்கொண்டு உங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று கட்டளையிடுகிறார்; அனைவரும் மக்காவிற்கு வருகிறார்கள்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மக்காவிற்கு காஃபாவிற்கு வருகிறார்கள்; முத்இமும் அவருடைய பிள்ளைகளும் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு இடது பக்கமும் வலது பக்கமும் நின்று கொண்டு பாதுகாப்பு தருகிறார்கள். அல்லாஹ்வுடைய தூதர் கஅபாவிற்கு வந்து தவாஃப் செய்கிறார்கள்; பிறகு தங்களுடைய வீட்டுக்குச் செல்கிறார்கள்; இந்த அத்தனை தருணங்களிலும் முத்இமும், அவருடைய பிள்ளைகளும் வலது இடது பக்கமாக நின்று தூதருக்கு அவர்களுடைய வீட்டில் நுழையும் வரை பாதுகாப்பாக இருக்கிறார்கள்; பிறகு மூன்று ஆண்டுகளும் முத்இம் உடைய பாதுகாப்பிலேயே தூதர் அவர்கள் மக்காவில் தாவா செய்தார்கள்.

சியரு அஃலாமின் நுபலா இப்னு கசீர்:2/153அர்ரஹீக் அல் மக்தூம் பக்கம் : 101

முத்இம் முஷ்ரிக்காக இருந்தாலும் அவரின் உதவியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நினைத்துப் பார்த்தார்கள்; எழுவது கைதிகள் அவர்களைக் கொல்ல வந்தாலும் இஸ்லாத்தை ஏற்காவிட்டாலும் இவர்களுடைய குற்றத்தை விட முத்இம் எனக்கும் மார்க்கத்திற்கும் செய்த உதவி பெரியது என்று நினைத்துப் பார்த்தார்கள்; முத்இம் இப்பொழுது உயிரோடு இருந்து இவர்களை விடுதலை செய்ய சொல்லி இருந்தால் கண்டிப்பாக அவரின் முகத்திற்காக நான் விடுதலை செய்திருப்பேன் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

எவ்வளவு ஒரு அழகிய முன்மாதிரியை அல்லாஹ்வின் தூதர் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள்; செய்து காட்டியிருக்கிறார்கள். இன்று பாருங்கள்; நமது சமுதாயத்தில் மக்கள் எப்படி நன்றி கெட்டத்தனமாக நடக்கிறார்கள்? செய்த உதவியை மறந்து விடுகிறார்கள்; முந்திய உறவுகளை மறந்து விடுகிறார்கள்; முந்திய வாழ்க்கையில் இருந்த அழகிய பண்பாடுகளை மறந்து விடுகிறார்கள்; சின்னச்சின்ன காரியங்களுக்காக பழிவாங்க கூடிய உணர்வு மிகைத்து விடுகின்றது; செய்த உதவியை மறப்பது, அதற்கு நன்றி செய்யாமல் இருப்பது மட்டுமல்லாமல் உதவி செய்தவர்களுக்கு கெடுதி செய்யக்கூடியவர்கள் இன்று நம் சமுதாயத்தில் அதிகரிக்கின்ற அவல நிலையை நாம் பார்க்கின்றோம்; அல்லாஹ் பாதுகாப்பானாக!

நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த மற்றொரு சம்பவம். அபுல் புஹ்தரி என்பவர். இவர் இதே பத்ரு போரில் எதிரிகளுடைய படையில் வந்திருக்கிறார்; பத்ருப்போர் நாம் படித்து பார்க்க வேண்டிய முக்கியமான போர். அல்லாஹ் கூறுகின்றான்;

قَدْ كَانَ لَكُمْ آيَةٌ فِي فِئَتَيْنِ الْتَقَتَا فِئَةٌ تُقَاتِلُ فِي سَبِيلِ اللَّهِ وَأُخْرَى كَافِرَةٌ يَرَوْنَهُمْ مِثْلَيْهِمْ رَأْيَ الْعَيْنِ وَاللَّهُ يُؤَيِّدُ بِنَصْرِهِ مَنْ يَشَاءُ إِنَّ فِي ذَلِكَ لَعِبْرَةً لِأُولِي الْأَبْصَارِ

(பத்ரு போர்க்களத்தில்) சந்தித்த இரு சேனைகளில் மெய்யாகவே உங்களுக்கொரு அத்தாட்சி இருந்தது. (ஒன்று) அல்லாஹ்வின் பாதையில் போர் புரியும் கூட்டம், மற்றொரு கூட்டத்தினர் நிராகரிப்பவர்கள். (நிராகரிப்பவர்கள் ஆகிய) இவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிபவர்களை தங்களைவிட இரு மடங்காக(த் தங்கள்) கண்ணால் கண்டனர். அல்லாஹ், தான் விரும்பியவர்களைத் தன் உதவியைக் கொண்டு (இவ்வாறு) பலப்படுத்துகின்றான். (படிப்பினை பெறும்) பார்வையுடையவர்களுக்கு நிச்சயமாக இதில் ஒரு (நல்ல) படிப்பினை இருக்கின்றது. (அல்குர்ஆன் 3 : 13)

முஃமின்களே! அந்த இரண்டு படை சந்தித்துக் கொண்டதில் உங்களுக்குப் பெரிய படிப்பினை இருக்கிறது என்று அல்லாஹு தஆலா சொல்கின்றான். இங்கே கஷ்டமான சூழ்நிலை என்னவென்றால் இப்பொழுது நம்முடைய சமுதாயதிற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சம்பவங்களைப் படித்து பார்ப்பதற்கு நேரமில்லை; அவர்கள் வாழ்வில் நடந்த அந்தப் போர் படிப்பினைகளை எல்லாம் இந்த சமுதாயத்திற்கு படித்துப் பார்ப்பதற்கு நேரம் இல்லை.

அன்பானவர்களே! பத்ருப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தோழர்களுக்கு கட்டளைகள் பலவற்றை தருகிறார்கள்; அது என்ன தெரியுமா? நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் குறைஷிகளுடைய மூத்தவர்களுடைய பெயர்களைச் சொல்லி இவர்களை எல்லாம் போர்களில் கண்டால் நீங்கள் கொள்ளாதீர்கள் என்று கூறினார்கள். இன்று தங்களை ஒட்டு மொத்த முஸ்லிம்களுக்கும் நாங்கள்தான் கலிஃபா, நாங்கள் தான் ஒட்டுமொத்த இஸ்லாமிய அரசாங்கம் என்று சொல்லக்கூடிய சிலர் உயிர்களைக் கொள்ளக்கூடியதையே இஸ்லாமாக காண்பித்துக் கொண்டு இருப்பவர்கள் இந்த சம்பவங்களைக் கொண்டு உணரவேண்டும்; அவர்கள் புரிய வேண்டும்.

போர் மைதானத்தில் நிற்கக்கூடிய சிலரின் பெயர்களை சொல்லி இவர்களை எல்லாம் கொள்ளாதீர்கள் என்று கூறினார்கள்; அவர்களைத் தேடிச் செல்லாதீர்கள்; அவர்களே உங்கள் முன் வந்து உங்களை கொல்வதற்காக வந்து நின்றால் உங்களை பாதுகாப்பதற்காக கொல்லலாம். அதை தவிர அவர்களை தவிர்த்து விடுங்கள் தவிர்த்துவிடுங்கள் என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர்தான் இந்த அபுல் புஹ்தரி என்பவர். அப்படி இவர் என்ன செய்தார்?

لا تقتلوا ابا البختري

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் அபுதாலிப் என்ற கன வாயில் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். அந்த கணவாயில் யாரும் இவர்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது என்றும் எந்த உதவியும் செய்யக்கூடாது என்றும் ஒதுக்கப்பட்டார்கள். அந்த

கணவாயில் இரண்டரை ஆண்டுகள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சிரமப்பட்டார்கள். பசியின் உச்சத்தை எட்டி விட்டார்கள். மிகப்பெரிய துன்பத்தை அனுபவித்தார்கள்.

அந்த நேரத்திலே குறைஷிகள் எல்லாம் ஒன்று கூடி ஒப்பந்தப் பத்திரத்தை எழுதி அதை மக்காவின் காபாவில் தொங்க விட்டிருந்தார்கள்; ஹாஷிம் குடும்பத்தாரோடு இனி எந்தவிதமான உறவும் வைக்கக்கூடாது; திருமண உறவும் வைக்க கூடாது; அவர்களுக்கு உண்பதற்கு கூட உணவுகள் கொடுக்க கூடாது என்ற அளவுக்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய குடும்பம் கஷ்டப்பட்டு கொண்டிருந்தது. அவர்களுடைய குழந்தைகள் கூட பசியால் அழுது கொண்டிருந்தது அந்த கணவாய்க்கு வெளியில் கேட்டது. அந்தளவுக்கு கஷ்டப்பட்டு கொண்டிருந்தார்கள்.

அந்த ஒப்பந்தம் கிழிக்கப்படுவதற்கு மிக முக்கியமான நபராக இருந்தவர் அபுல் புஹ்தரி. ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அதை நினைத்துப் பார்த்து சொன்னார்கள்; அபுல் புஹ்தரியை பார்த்தால் அவரை நீங்கள் கொள்ளாதீர்கள் என்று.
சியரு அஃலாமின்நுபலா இப்னு கசீர் : 2/436 அர்ரஹீக் அல் மக்தூம் பக்கம் : 186

அவர் செய்த ஷிர்க் அவரோடு; அவருடைய நிராகரிப்புக்கு அல்லாஹ் மறுமையில் தீர்ப்பளிப்பான். அவர் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு செய்த உதவியை நினைத்துப் பார்த்து அவர்கள் குடும்பத்திற்கு செய்த உதவியை நினைத்துப் பார்த்து அவர்களை கொள்ளாதீர்கள் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

அன்பானவர்களே! இந்த செயலை அல்லாஹ் அங்கிகரித்தான். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் செய்த இந்த செயல் தவறானதாக இருந்திருந்தால் அல்லாஹு தஆலா வஹியைக் கொண்டு தனது தூதரைத் திருத்தி இருப்பான். அல்லாஹ் அங்கீகரித்ததன் மூலம் அதிலிருந்து நாம் உணர வேண்டியது யார் ஒருவர் நமக்கு உதவி செய்தாரோ அவர் எதிரிகளுடன் இருந்தால்கூட அவருக்கு நாம் உதவி செய்ய வேண்டுமே தவிர அவரை பழிவாங்கும் எண்ணம் மிகைத்துவிடக் கூடாது.

கண்ணியத்திற்குரியவர்களே! எதிரிகளிடமே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் என்றால் அவர்களுடைய தோழர்கள் இடத்தில் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள். அன்னை கதீஜா (ரலி) அவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலாம் அவர்கள் நினைத்துப் பார்க்காத நாள் இருக்குமா?

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வீட்டிலிருந்து புறப்பட்டு கொஞ்ச தூரம் நடந்தாலே அவர்களுக்கு அன்னை கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய ஞாபகம் வந்துவிடும். கதீஜாவை நினைவு கூறுவார்கள்; அவர்களை புகழ்ந்து பேசுவார்கள். ஒருநாள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா நடந்து செல்லும்போது கதிஜா (ரலி) அவர்களை பற்றி ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலாம் அவர்கள் கூறிக் கொண்டே

வந்தார்கள். அதற்கு அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ரோஷம் வந்து விட்டது. என்ன ரசூல் (ஸல்) அவர்களே! நீங்கள் இந்த கிழவியை புகழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள் என்று.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலாம் அன்னை கதிஜா (ரலி) திருமணம் முடிக்கும் போது 40 வயது. அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்; உங்களுக்கு இவ்வளவு சிறந்த பெண்ணை கொடுத்திருக்கும் போது அந்த கிழவியை நீங்கள் நினைக்கிறீர்கள் என்று. அதற்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. கதீஜா (ரலி) விட எந்த ஒரு பெண்ணையும் அவருக்கு பகரமாக எனக்கு அல்லாஹு தஆலா கொடுக்கவில்லை; மக்கள் என்னை பொய்ப்பித்த போது கதீஜா (ரலி) அவர்கள் என்னை நம்பிக்கை கொண்டார்கள்; மக்கள் என்னை வெறுத்த போது அவர் என்னை ஆதரித்தார்; மக்கள் என்மீது செலவு செய்ய கஞ்சத்தனம் காட்டியபோது அவர் எனக்காக செலவு செய்தார் என்று கூறினார்கள். கதீஜாவின் மூலமாக அல்லாஹ் எனக்கு குழந்தைகளை கொடுத்தான். பிருகு அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தனக்குள் கூறிக்கொண்டார்கள்; இனி ஒருக்காலும் காதலியைப் பற்றி குறைவாக நான் இனிமேல் கூற மாட்டேன் என்று. (3)

முஸ்னது அஹமது எண்: 23719 ஷரீஆ இமாம் - ஆஜுரி (280-360)

கண்ணியத்திற்குரிய ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இந்த வஃபாவை நாம் நினைவு கூற வேண்டும். தன்னுடைய மனைவி தன்னிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்று வாழ்நாளெல்லாம் நினைத்தார்கள். அவர்களுக்காக துவா செய்தார்கள்; அவர்கள் செய்த உபகாரத்தை எல்லாம் நினைவு கூறினார்கள்.

இன்னொரு சம்பவத்தைப் பாருங்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மரண தருவாய்க்கு ஒரு நாள் முன்னால் அவர்கள் தோழர்களை எல்லாம் ஒன்றுகூட்டி சொல்கிறார்கள்; நீங்கள் என்னென்ன உதவியை செய்தீர்களோ அந்த உதவிகளுக்கு எல்லாம் நான் கைமாறு செய்திருக்கிறேன். ஆனால் அபூபக்ர் செய்த உதவியை தவிர, அபூபக்ர் எனக்கு செய்த உதவிக்கு அல்லாஹ் கைமாறு செய்வான். அல்லாஹ் அந்த உதவிக்கு உரிய கூலியை கொடுப்பான். (4)

திர்மிதி எண் : 3594

கண்ணியத்திற்குரியவர்களே! நம்முடைய மார்க்கம் இந்த இஸ்லாம் நமக்கு இப்படிப்பட்ட ஒழுக்கத்தை கடைபிடிக்க கூறி வலியுறுத்துகிறது. ஆர்வமூட்டுவது மட்டுமல்ல அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வார்த்தையை பாருங்கள்;

لَا إِيمَانَ لِمَنْ لَا أَمَانَةَ لَهُ وَلَا دِينَ لِمَنْ لَا عَهْدَ لَهُ

யார் அமானிதங்களை பேணவில்லையோ அவரிடத்தில் இறைநம்பிக்கை இல்லை. உங்களை நம்பி ஒரு செய்தியைச் சொன்னால், ஒரு பொறுப்பைக் கொடுத்தால், உங்களை நம்பி ஒரு தொகையை ஒப்படைத்தாலோ அவர்களில் யார் அமானிதத்தை பேணவில்லையோ அவர்களிடத்தில் ஈமானே

இல்லை என்று சொன்னார்கள். யார் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கடைபிடிக்கவில்லையோ, கணவன் மனைவி இருவர் ஒப்பந்தம் செய்து கொண்டாலோ, பெற்றோர் பிள்ளைகள் ஒப்பந்தம் செய்து கொண்டாலோ, தொழில் ஆரம்பிக்கக் கூடிய இரண்டு பங்காளிகள் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், இரண்டு நண்பர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டாலும் சரி எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் சரி சிறியதோ பெரியதோ நடுத்தரமானது எதுவாயிருந்தாலும் அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்; யார் ஒப்பந்தம், வாக்குகளை பேணவில்லையோ அவர்களுக்கு மார்க்கமே கிடையாது என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: முஸ்னத் அஹ்மது, எண்: 11935, 12108

அன்பானவர்களே! நம் பெற்றவர்கள் நமக்கு செய்த உபகாரத்திற்கு நன்றி உள்ளவர்களாக நடந்து கொள்வது. அதனால்தான் குர்ஆனில் நூற்றுக்கணக்கான இடங்களில் எங்கு அல்லாஹ் வணக்க வழிபாடுகளை அல்லாஹ்விற்கு மட்டும் செய்ய வேண்டும் அதில் யாரையும் அல்லாஹ்விற்கு இணை வைக்கக் கூடாது என்று சொல்கின்றானோ அதை தொடர்ந்து பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றான்;

وَاعْبُدُوا اللَّهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَبِذِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِينِ وَالْجَارِ ذِي الْقُرْبَى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْبِ وَابْنِ السَّبِيلِ وَمَا مَلَكَتْ أَيْمَانُكُمْ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُورًا

அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தைக்கு நன்றி செய்யுங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அந்நிய அண்டை வீட்டாருக்கும், (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், பயணிகளுக்கும், உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும், (அன்புடன் நன்றி செய்யுங்கள்.) எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 4 : 36)

قُلْ تَعَالَوْا أَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ أَلَّا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ مِنْ إِمْلَاقٍ نَحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ

(நபியே! அவர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள்: "வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடுப்பவற்றை(யும் ஏவியிருப்பவற்றையும்) நான் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கிறேன். (அவையாவன:) அவனுக்கு யாதொன்றையும் நீங்கள் இணையாக்காதீர்கள். (உங்கள்) தாய் தந்தையுடன் மிக அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள் (அவர்களுக்கு உதவி செய்யுங்கள்). வறுமைக்குப் பயந்து உங்கள் பிள்ளைகளை நீங்கள் கொலை செய்யாதீர்கள். (ஏனென்றால்,) உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம். இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ உள்ள மானக்கேடான விஷயங்களில் எதற்கும் நெருங்காதீர்கள். (கொலை செய்யக்கூடாதென்று) அல்லாஹ் தடுத்துள்ள எந்த மனிதனையும்

நியாயமின்றி கொலை செய்யாதீர்கள். நீங்கள் (தவறு செய்யாது) உணர்ந்து கொள்வதற்காக இவற்றை (இறைவன்) உங்களுக்கு (விவரித்து) உபதேசிக்கின்றான். (அல்குர்ஆன் 6 : 151)

وَقَضَى رَبُّكَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا إِمَّا يَبْلُغَنَّ عِنْدَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلَاهُمَا فَلَا تَقُلْ لَهُمَا أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُلْ لَهُمَا قَوْلًا كَرِيمًا

(நபியே!) உங்களது இறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக்கூடாதென்று (கட்டளையிட்டிருப்பதுடன்) தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளை யிட்டிருக்கிறான். உங்களிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்டபோதிலும் அவர்களை வெருட்டவும் வேண்டாம்; அவர்களை (நிந்தனையாகச்) "சீ" என்றும் சொல்ல வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறியபோதிலும்) மிக்க மரியாதையாக(வும் அன்பாகவுமே) பேசுங்கள். (அல்குர்ஆன் 17 : 23)

وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ إِحْسَانًا حَمَلَتْهُ أُمُّهُ كُرْهًا وَوَضَعَتْهُ كُرْهًا وَحَمْلُهُ وَفِصَالُهُ ثَلَاثُونَ شَهْرًا حَتَّى إِذَا بَلَغَ أَشُدَّهُ وَبَلَغَ أَرْبَعِينَ سَنَةً قَالَ رَبِّ أَوْزِعْنِي أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِي أَنْعَمْتَ عَلَيَّ وَعَلَى وَالِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَالِحًا تَرْضَاهُ وَأَصْلِحْ لِي فِي ذُرِّيَّتِي إِنِّي تُبْتُ إِلَيْكَ وَإِنِّي مِنَ الْمُسْلِمِينَ

மனிதன் தன்னுடைய தாய் தந்தைக்கு நன்றி செலுத்தும்படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், கஷ்டத்துடனேயே அவனை (கர்ப்பத்தில்) சுமந்திருந்து கஷ்டத்துடனேயே பிரசவிக்கின்றாள். அவள் கர்ப்பமானதிலிருந்து, இவன் பால்குடி மறக்கும் வரையில், முப்பது மாதங்கள் (மிக்க கஷ்டத்துடன்) செல்கின்றன. இவன் வாலிபமாகி நாற்பது வயதையடைந்தால் "என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தை மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன்னுடைய திருப்தியை அடையக்கூடிய நற்செயல்களைச் செய்யும்படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்வாயாக! எனக்கு உதவியாக இருக்கும்படி என்னுடைய குடும்பத்தை சீர்திருத்திவை. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். (உனக்கு) முற்றிலும் வழிபட்டவர்களில் நானும் ஒருவன்" என்று கூறுவான். (அல்குர்ஆன் 46 : 15)

இதுபோன்று அண்டை வீட்டார்கள், நமது நண்பர்கள், நமது உறவுகள், நமக்கு கை கொடுத்த எத்தனையோ நபர்கள் நம் வாழ்க்கையில் இருக்கலாம்; அவர்கள் நமக்கு செய்த உதவியை நினைத்துப் பார்ப்பது; அவர்களுக்கு தேவை இருக்கும்போது நாம் அவர்களுக்கு உதவி செய்வது; நாம் சிறுபிள்ளையாக இருக்கும்போது நம் தந்தையுடைய சகோதரர் நமக்கு உதவி செய்து இருக்கலாம்; நம் தாயின் சகோதரர் நம் தாயின் சகோதரி எடுத்து வளர்த்து இருக்கலாம்; நமக்கு அன்பு காட்டியிருக்கலாம்; இன்று எத்தனையோ பேர் பெரியவர்களாகி படித்து வளர்ந்து ஆளான பிறகு தான் உண்டு தான் செல்வம் உண்டு தான் வேலை உண்டு தனது மனைவி மக்கள் உண்டு என்று உறவினர்களை எல்லாம் மறக்கக் கூடிய வீணர்களை இந்த காலத்தில் நாம் பார்க்கிறோம்.

அன்பானவர்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை கூறி நிறைவு செய்கின்றோம்;

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய வீட்டுக்கு ஒரு பெண் வருகிறார்கள்; ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யார் என்று கேட்கிறார்கள்; அந்தப் பெண் பெயரை சொல்லவும் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். உடனே கேட்கிறார்கள்; நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? நாங்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு என்ன நடந்தது? என்று இப்படி அனைத்து கேள்வியையும் விசாரிக்கிறார்கள். பிறகு அந்தப் பெண் எல்லா கேள்விக்கும் ஆறுதலாக பதில் சொல்லிவிட்டு சென்ற உடனே அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்கிறார்கள்; விவரம் தெரியாத ஒரு கிழவி உங்களிடத்தில் வந்தால்; அந்தக் கிழவியிடம் இவ்வளவு கண்ணியமாக இவ்வளவு உருகி குலைந்து கேள்வி கேட்கிறீர்களே என்று. ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்ன பதிலை பாருங்கள்; ஆயிஷாவே! இந்த பெண் நானும் கதிஜாவும் வாழ்ந்து கொண்டிருக்கும்போது எங்களை வந்து விசாரிக்க கூடியவராக இந்த பெண் இருந்தார்; உதவி ஒன்றும் பெரிதாக செய்யவில்லை; நானும் கதீஜாவும் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அவ்வப்போது நேரம் கிடைத்தபோதெல்லாம் எங்களை வந்து விசாரித்து விட்டுச் செல்வார்; அதற்குத்தான் நான் இப்படி நடந்து கொண்டேன் என்று சொன்னார்கள். (5)

ஹாகிம் எண் : 39

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த சமுதாயத்தில் நாமும் இந்த நல்ல சம்பவங்களை உபதேசித்து கொள்ள வேண்டும்; நினைவில் கொள்ள வேண்டும். இனி வளரும் தலைமுறைக்கு இந்த நினைவுகளை வரலாறுகளை எடுத்துக் கூறி விசுவாசமாக வாழக்கூடிய நன்றியாக வாழக்கூடிய வாக்குகளைப் பேணக்கூடிய நன்றி உதவிகளை பேணக்கூடிய நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும். எனக்கும் உங்களுக்கும் அல்லாஹு தஆலா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நற்குணத்தை பேணி வாழ உதவி செய்வானாக ! அருள் புரிவானாக!

**ஆமீன்.**

**குறிப்புகள் :**

குறிப்பு 1).

حَدَّثَنَا أَبُو الْمُغِيرَةِ حَدَّثَنَا مُعَانُ بْنُ رِفَاعَةَ حَدَّثَنِي عَلِيُّ بْنُ يَزِيدَ عَنْ الْقَاسِمِ عَنْ أَبِي أُمَامَةَ الْبَاهِلِيِّ عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ قَالَ لَقِيتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَابْتَدَأْتُهُ فَأَخَذْتُ بِيَدِهِ قَالَ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ مَا نَجَاةُ هَذَا الْأَمْرِ قَالَ يَا عُقْبَةُ احْرُسْ لِسَانَكَ وَلْيَسَعْكَ بَيْتُكَ وَابْكِ عَلَى خَطِيئَتِكَ قَالَ ثُمَّ لَقِيَنِي رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَابْتَدَأَنِي فَأَخَذَ بِيَدِي فَقَالَ يَا عُقْبَةُ بْنُ عَامِرٍ أَلَا أُعَلِّمُكَ خَيْرَ ثَلَاثِ سُوَرٍ أُنْزِلَتْ فِي التَّوْرَاةِ وَالْإِنْجِيلِ وَالزَّبُورِ وَالْفُرْقَانِ الْعَظِيمِ قَالَ قُلْتُ بَلَى جَعَلَنِي اللَّهُ فِدَاكَ قَالَ فَأَقْرَأَنِي قُلْ هُوَ اللَّهُ

أَحَدٌ وَقُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ وَقُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ثُمَّ قَالَ يَا عُقْبَةُ لَا تَنْسَاهُنَّ وَلَا تَبِيتَ لَيْلَةً حَتَّى تَقْرَأَهُنَّ قَالَ فَمَا نَسِيتُهُنَّ مِنْ مُنْذُ قَالَ لَا تَنْسَاهُنَّ وَمَا بِتُّ لَيْلَةً قَطُّ حَتَّى أَقْرَأَهُنَّ قَالَ عُقْبَةُ ثُمَّ لَقِيتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَابْتَدَأْتُهُ فَأَخَذْتُ بِيَدِهِ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ أَخْبِرْنِي بِفَوَاضِلِ الْأَعْمَالِ فَقَالَ يَا عُقْبَةُ صِلْ مَنْ قَطَعَكَ وَأَعْطِ مَنْ حَرَمَكَ وَأَعْرِضْ عَمَّنْ ظَلَمَكَ (مسند أحمد– 16696)

குறிப்பு 2).

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ يُوسُفَ أَخْبَرَنَا ابْنُ وَهْبٍ قَالَ أَخْبَرَنِي يُونُسُ عَنْ ابْنِ شِهَابٍ قَالَ حَدَّثَنِي عُرْوَةُ أَنَّ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا زَوْجَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ حَدَّثَتْهُ أَنَّهَا قَالَتْ لِلنَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ هَلْ أَتَى عَلَيْكَ يَوْمٌ كَانَ أَشَدَّ مِنْ يَوْمِ أُحُدٍ قَالَ لَقَدْ لَقِيتُ مِنْ قَوْمِكِ مَا لَقِيتُ وَكَانَ أَشَدَّ مَا لَقِيتُ مِنْهُمْ يَوْمَ الْعَقَبَةِ إِذْ عَرَضْتُ نَفْسِي عَلَى ابْنِ عَبْدِ يَالِيلَ بْنِ عَبْدِ كُلَالٍ فَلَمْ يُجِبْنِي إِلَى مَا أَرَدْتُ فَانْطَلَقْتُ وَأَنَا مَهْمُومٌ عَلَى وَجْهِي فَلَمْ أَسْتَفِقْ إِلَّا وَأَنَا بِقَرْنِ الثَّعَالِبِ فَرَفَعْتُ رَأْسِي فَإِذَا أَنَا بِسَحَابَةٍ قَدْ أَظَلَّتْنِي فَنَظَرْتُ فَإِذَا فِيهَا جِبْرِيلُ فَنَادَانِي فَقَالَ إِنَّ اللَّهَ قَدْ سَمِعَ قَوْلَ قَوْمِكَ لَكَ وَمَا رَدُّوا عَلَيْكَ وَقَدْ بَعَثَ إِلَيْكَ مَلَكَ الْجِبَالِ لِتَأْمُرَهُ بِمَا شِئْتَ فِيهِمْ فَنَادَانِي مَلَكُ الْجِبَالِ فَسَلَّمَ عَلَيَّ ثُمَّ قَالَ يَا مُحَمَّدُ فَقَالَ ذَلِكَ فِيمَا شِئْتَ إِنْ شِئْتَ أَنْ أُطْبِقَ عَلَيْهِمْ الْأَخْشَبَيْنِ فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ بَلْ أَرْجُو أَنْ يُخْرِجَ اللَّهُ مِنْ أَصْلَابِهِمْ مَنْ يَعْبُدُ اللَّهَ وَحْدَهُ لَا يُشْرِكُ بِهِ شَيْئًا (صحيح البخاري –2992)

குறிப்பு 3).

حَدَّثَنَا عَلِيُّ بْنُ إِسْحَاقَ أَخْبَرَنَا عَبْدُ اللَّهِ قَالَ أَخْبَرَنَا مُجَالِدٌ عَنْ الشَّعْبِيِّ عَنْ مَسْرُوقٍ عَنْ عَائِشَةَ قَالَت كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا ذَكَرَ خَدِيجَةَ أَثْنَى عَلَيْهَا فَأَحْسَنَ الثَّنَاءَ قَالَتْ فَغِرْتُ يَوْمًا فَقُلْتُ مَا أَكْثَرَ مَا تَذْكُرُهَا حَمْرَاءَ الشِّدْقِ قَدْ أَبْدَلَكَ اللَّهُ عَزَّ وَجَلَّ بِهَا خَيْرًا مِنْهَا قَالَ مَا أَبْدَلَنِي اللَّهُ عَزَّ وَجَلَّ خَيْرًا مِنْهَا قَدْ آمَنَتْ بِي إِذْ كَفَرَ بِي النَّاسُ وَصَدَّقَتْنِي إِذْ كَذَّبَنِي النَّاسُ وَوَاسَتْنِي بِمَالِهَا إِذْ حَرَمَنِي النَّاسُ وَرَزَقَنِي اللَّهُ عَزَّ وَجَلَّ وَلَدَهَا إِذْ حَرَمَنِي أَوْلَادَ النِّسَاءِ (مسند أحمد –23719)

குறிப்பு 4).

حَدَّثَنَا عَلِيُّ بْنُ الْحَسَنِ الْكُوفِيُّ حَدَّثَنَا مَحْبُوبُ بْنُ مُحْرِزٍ الْقَوَارِيرِيُّ عَنْ دَاوُدَ بْنِ يَزِيدَ الْأَوْدِيِّ عَنْ أَبِيهِ عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا لِأَحَدٍ عِنْدَنَا يَدٌ إِلَّا وَقَدْ كَافَيْنَاهُ مَا خَلَا أَبَا بَكْرٍ فَإِنَّ لَهُ عِنْدَنَا يَدًا يُكَافِيهِ اللَّهُ بِهَا يَوْمَ الْقِيَامَةِ وَمَا نَفَعَنِي مَالُ

أَحَدٍ قَطُّ مَا نَفَعَنِي مَالُ أَبِي بَكْرٍ وَلَوْ كُنْتُ مُتَّخِذًا خَلِيلًا لَاتَّخَذْتُ أَبَا بَكْرٍ خَلِيلًا أَلَا وَإِنَّ صَاحِبَكُمْ خَلِيلُ اللَّهِ قَالَ أَبُو عِيسَى هَذَا حَدِيثٌ حَسَنٌ غَرِيبٌ مِنْ هَذَا الْوَجْهِ (سنن الترمذي – 3594)

குறிப்பு 5).

حدثنا أبو العباس محمد بن يعقوب ، ثنا محمد بن إسحاق الصغاني ، ثنا أبو عاصم ، ثنا صالح بن رستم ، عن ابن أبي مليكة ، عن عائشة ، قالت : جاءت عجوز إلى النبي صلى الله عليه وسلم وهو عندي ، فقال : لها رسول الله صلى الله عليه وسلم : « من أنت ؟ » قالت : أنا جثامة المزنية ، فقال : « بل أنت حسانة المزنية ، كيف أنتم ؟ كيف حالكم ؟ كيف كنتم بعدنا ؟ » قالت : بخير بأبي أنت وأمي يا رسول الله ، فلما خرجت قلت : يا رسول الله ، تقبل على هذه العجوز هذا الإقبال ؟ فقال : « إنها كانت تأتينا زمن خديجة ، وإن حسن العهد من الإيمان » . « هذا حديث صحيح على شرط الشيخين فقد اتفقا على الاحتجاج برواته في أحاديث كثيرة وليس له علة« (المستدرك على الصحيحين للحاكم – 39)